**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண்.64/2024 நாள்:13.03.2026

வா.சா:– 1 செந்தில்குமார் ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை (1 ம் பிரதிவாதி தரப்பில்):–

எனது பெயர் செந்தில்குமார் என்றால் சரிதான். எனது அப்பா பெயர் தங்கவேல். எனது தாத்தா பெயர் பழனியப்ப கவுண்டர். எனது தாத்தாவின் தகப்பனார் பெயர் கருப்பண கவுண்டர். நான் கரட்டூரைச் சேர்ந்தவர். 1ம் பிரதிவாதி பரமசிவத்தின் குடும்பத்தினர் ஆராம்பாளையத்தில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து கொளத்துப்பாளையம் ஆ கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் பழைய சர்வே எண்.195–C மற்றும் 196/1 என்றால் சரிதான். தாவா சொத்தின் ரீ. சர்வே எண்.417 என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் பட்டா எண்.328ல் இருந்தது என்றால் சரிதான். பட்டா எண் 328 ஒரு கருப்பண கவுண்டர் மகன் பழனியப்ப கவுண்டர் பெயரில் இருந்தது என்றால் சரிதான். பட்டா எண்.328ல் சர்வே எண்.417 தவிர மற்ற சர்வே எண்களான 233/5, 234/2, 235/2, 280/4, 235/4, 385/7 என்ற சர்வே எண்கள் இருந்தது என்றால் சரிதான். இந்த பட்டா எண் 328 முதலில் ஒரே நபர் பெயரில்தான் இருந்தது என்றால் சரிதான். எனக்கு இந்த பட்டா எண்ணில் சர்வே எண் 417 ஐ தவிர மற்ற புல எண்களில் நான் பாத்தியம் கோரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக நான் எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். ஒரு வழக்கு கொடுமுடி உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.27/2015 தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு இந்த தாவா சொத்தில் எனக்கு உரிமை உள்ளது என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு பின்னிட்டு ஈரோடு முதலாம் கூடுதல் சார்பு நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண்.560/2019 ஆக மாறுதல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு பின்னிட்டு இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.64/2024ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனவே இந்த வழக்கில் ஏ.பி.பரமசிவம், அவரது

## Copy of Deposition

தந்தை பழனியப்பன், அவரது சகோதரி நீலாவதி, தாயார் பூவாயி ஆகியோர்கள் பெயரிலும் அவரிடமிருந்து இந்த தாவா சொத்தை கிரையம் பெற்ற நந்தகுமார் என்பவர் பெயரிலும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு காரணம் 1 முதல் 4 பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.208/2014 என்ற வழக்கு பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்து அதில் இறுதிநிலை தீர்ப்பாணை பெற்றுள்ளதையும், அதன் அடிப்படையில் பட்டா பெயர் மாற்றம் செய்ய முயன்றதையும் தெரிந்து கொண்டுதான் இந்த தாவாவை விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். இந்த தாவாவில் சமாதான தீர்ப்பாணையை இரத்து செய்யவோ அல்லது செல்லத்தக்கது அல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.633/2023 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கை யார் பெயரில் தாக்கல் செய்தேன் என்றால் எனது சகோதரிகள் மற்றும் அத்தை பெயரில் தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கின் சொத்து விவரத்தில் இந்த வழக்கின் சொத்தை 1வது அயிட்டமாக காட்டியுள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி இரண்டு தாவாவிலும் பழைய பட்டா எண்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பழைய சர்வே எண் குறிப்பிட்டுள்ளேன். 30.07.1996ல் நானும் எனது தகப்பனாரும் எங்களுக்கு பாத்தியப்பட்ட கொளத்துப்பாளையம் கிராமம் மற்றும் ஊஞ்சலூர் கிராமத்தில் உள்ள சொத்துக்களையும் மற்றும் இந்த தாவாவில் குறிப்பிட்டுள்ள ரீ.ச.எண்.417 சொத்தையும் சேர்த்து இருவரும் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் எனக்கு ஒதுக்கப்பட்ட பாக சொத்து B அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் யாரும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். 25.09.2014ல் நானும், எனது அத்தை மற்றும் எனது சகோதரிகள், எனது தந்தை அனைவரும் சேர்ந்து பதிவு செய்யப்பட்ட விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திலும் தாவா சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த பத்திரத்திலும் 1 முதல் 4 பிரதிவாதிகள் யாரும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த

**Copy of Deposition**

சொத்துக்களில் தாவா சொத்துக்களை சேர்த்து பாகப்பிரிவினை மற்றும் விடுதலை பத்திரம் செய்து கொண்டது 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றாலும், அவர்களை கட்டுப்படுத்தாது என்றாலும் சரிதான். அசல் வழக்குஎண்.633/2023 (அசல் வழக்கு எண்.348/2024) எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் பழைய சர்வே எண்ணை திருத்தம் செய்வதற்காக தாக்கல் செய்தேன். சர்வே எண்.555/1ல் விஸ்தீரண திருத்தம் செய்வதற்காக தாக்கல் செய்தேன். எனது சகோதரிகள் மற்றும் எனது அத்தை ஆகியோர்கள் பாகபாத்திய விடுதலை பத்திரத்திலும், சொத்து விவரத்தில் க.ச.எண்.195இ, மற்றும் 196எ என தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்ததையும் மற்றும் பாககறார் பத்திரத்தில் க.ச.எண்.555/1 பூமியின் அளவினை குறிப்பிடப்படாத காரணத்தினாலும் பிரதிவாதிகள் அதை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு சட்டத்திற்கு புறம்பான வகையில் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் இந்த தாவா சொத்தில் அத்துமீறி நுழையவும், ஆக்கிரமிப்பு செய்யவும் முயற்சி செய்ததால் அந்த தாவா தாக்கல் செய்தததாக வாதுரையில் கூறியிருந்தால் அது சரிதான். தாவா சொத்தை மேற்படி வழக்கில் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பழைய சர்வே எண்ணில் திருத்தம் கோரியும் அந்த வழக்கை தாக்கல் செய்தேன். நான் அவ்வாறு வாதுரையில் குறிப்பிடவில்லை என்றாலும், பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்து சம்பந்தமாக ஒரு தீர்ப்பாணை பெறவேண்டும் என்பதற்காக மேற்படி அசல் வழக்கு எண்.633/2023ஐ தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court read over to the witness and acknowledge by

Interpreted
Him / Her To Be Correct

P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2026.03.13 15:15:32 +0200

Subordinate Judge,
Kodumudi